**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி டெங்கு விழிப்புணர்வு குறித்து கட்டுமான உரிமையாளர்கள், மெட்ரோ ரெயில், மாநகராட்சி, சிஎம்டிஏ, இரயில்வே, பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர்களுடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் டாக்டர் சி விஜயபாஸ்கர் விரிவான ஆலோசணை.**

**கட்டுமான பணி நடைபெறும் இடங்களில் டெங்குவை உருவாக்கும் கொசுக்களை உற்பத்தி செய்யும் தண்ணீரை தேக்காமல் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் டாக்டர் சி விஜய பாஸ்கர் வேண்டுகோள்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் செயல்படும் அரசு எல்லா காலங்களிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுகின்ற காரணத்தினால், எல்லாவிதமான காய்ச்சல், வயிற்றுப்போக்கு மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி தமிழக அரசு பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், காய்ச்சல் கண்டறிதல், காய்ச்சல் கண்ட இடங்களில் உடனடி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் வயிற்றுப்போக்கிற்கு சிகிச்சை மேற்கொள்ளுதல் போன்ற தொடர் நடவடிக்கைகள் ஆண்டுதோறும் எடுக்கப்பட்டு வருவதன் காரணமாக தமிழகத்தில் தொற்று நோய்கள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் டெங்கு, பன்றி காய்ச்சல் போன்ற நோய்கள் இந்தியாவின் மற்ற பகுதிகளில் மிக அதிக அளவில் நிகழ்ந்த போதும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க உடனடியாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பன்முக (Multi dimensional preventive activities) தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்த நோய்களின் பாதிப்பு தமிழகத்தில் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த ஆண்டு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டால் அதற்கு உடனடி முறையான சிகிச்சைகள் அளிக்கப்படுவது குறித்தும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி முதற்கட்டமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், மருத்துவக் கல்லூரி முதல்வர்கள், நகராட்சி ஆணையாளர்கள், இணை இயக்குநர் மருத்துவ பணிகள், துணை இயக்குநர் சுகாதார பணிகள், பஞ்சாயத்து மற்றும் பேரூராட்சி

உதவி இயக்குநர்கள், தனியார் மருத்துவமனை மருத்துவர்கள், இந்திய மருத்துவ சங்க மருத்துவர்கள், இந்திய குழந்தைகள்நல சங்க மருத்துவர்கள், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் ஆகியோருக்கான தொற்றுநோய் கட்டுப்பாடு குறித்த வழிகாட்டுதல், ஆய்வுகூட்டம் மற்றும் பயிலரங்கம் இந்த ஆண்டில் பல்வேறு கால கட்டங்களில் நடத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இன்று **12.11.2015**, கட்டுமான நிறுவனங்களை சார்ந்த கட்டுமான உரிமையாளர்கள், கட்டுமானப்பணி பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள், பொதுப்பணித்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், இரயில்வே மற்றும் சென்னை மெட்ரோ ரயில் ஆகிய துறைகளில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் டாக்டர் சி விஜய பாஸ்கர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு டெங்கு காய்ச்சல் குறித்தும் குறிப்பாக டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் பற்றியும் விளக்கப்பட்டது. மேலும் கட்டுமானப்பணிகள் நடைபெறும் கட்டிடங்களில் தண்ணீர் தேக்கம் குறித்தும் அதன் மூலம் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகும் வாய்ப்புகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அப்போது கட்டுமானப்பணிகளில் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்கும் முறைகள் குறித்தும், கட்டுமான உரிமையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள், **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி எடுக்கப்பட்ட பன்முக தடுப்பு நடவடிக்கைகளின் காரணமாக தொற்றுநோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அனைத்து கட்டுமான பணி உரிமையாளர்கள், பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் அனைவரும் தத்தமது கட்டுமான பணி நடைபெறும் கட்டிடங்களில் தேவையற்ற நீர்தேக்கங்களை தவிர்க்குமாறும் அதன் மூலம் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுத்து ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வு கூட்டத்தை ஒட்டி கட்டிட உரிமையாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்கள் அனைவருக்கும் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் மற்றும் அவற்றை தடுப்பது குறித்தும் விரிவாக விளக்கும் வகையில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு துறை செயலர்டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப டெங்கு விழிப்புணர்வு குறித்து செயல் விளக்க உரையாற்றிட மெட்ரோ ரயில், தொழிலாளர் துறை, இரயில்வே, சென்னை மாநகராட்சி, சிஎம்டிஏ உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9